# பக்தி வைராக்கியம்

டேவிட் மெரெக்

REFORMED PUBLICATIONS
சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**பக்திவைராக்கியம்**

டேவிட் மெரெக்

*முதல் பதிப்பு: 2020*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**

*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம், சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைபேசி: 9445671113*
*ஈமெயில்:* msjamesin@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த*
*மேலதிக தகவல்களுக்கு*
www.biblelamp.org
*வலைப்பூவைப் பார்க்கவும்.*

# அறிமுக வரிகள் . . .

வேதபூர்வமான தெளிவான போதனைகளைக் கொண்ட கிறிஸ்தவ இலக்கியங்கள் தமிழில் அரிதாக இருக்கும் இக்காலங்களில் பக்திவைராக்கியம் போன்ற நல்ல நூல்களை தமிழினத்துக் கிறிஸ்தவர்கள் பயனடையும் விதத்தில் சீர்திருத்த வெளியீடுகள் வெளியிட்டு வருவது மிகவும் பாராட்டத்தகுந்தது. கிறிஸ்தவ தமிழ் வாசகர்களில் பெரும்பாலானோர் இத்தகைய நல்ல நூல்களை வாசித்துப் பழகியதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. நம்மினத்தில் வாசிப்புப் பழக்கம் பெரிதளவில் இல்லாதது முதலாவது காரணம். இரண்டாவது, திருச்சபைகள் ஆத்துமாக்களை வாசிப்பில் வளரும்விதத்தில் அவர்களை வளர்க்காமல் இருப்பது. உணர்ச்சிக்கு மட்டும் தீனியளித்து ஆத்துமாக்களை திசைதிருப்பும் ஆத்மீக வல்லமையற்ற கிறிஸ்தவ ஊழியங்களே நம்மத்தியில் அதிகம். அப்படியானால், நேரத்தையும் பணத்தையும் விரயமாக்கி இத்தகைய நூல்களை சீர்திருத்த வெளியீடுகள் ஏன் வெளியிட்டு வருகின்றது என்று உடனடியாகவே கேட்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். கர்த்தர் இத்தகைய நூல்களைப் பயன்படுத்தி சிலருடைய கண்களையாவது திறந்து வைக்கமாட்டாரா, அவர்களுடைய ஆத்மீகத் தாகத்தைத் தீர்த்து வைக்கமாட்டாரா என்ற ஆதங்கமே அதற்குக் காரணம். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை என்பதை தொடர்ந்து விற்பனையில் இருந்து வரும் சீர்திருத்த வெளியீடுகள் வெளியிட்ட திருச்சபை வரலாறு நூல்கள் காட்டி வருகின்றன.

இந்நூலின் ஆசிரியர் டேவிட் மெரெக், அமெரிக்காவில் சீர்திருத்த பாப்திஸ்து சபையொன்றில் போதகராக இருப்பதோடு மிஷனரியாகவும் பணிபுரிந்து வருகிறார். இருபது வருடங்களுக்கு மேல் அவரை அறிந்திருக்கிறேன்; நல்ல நண்பர். கிறிஸ்துவின் பணியில் வைராக்கியத்தோடு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். இந்தியா

மட்டுமல்லாது வேறு நாடுகளுக்கும் சென்று போதகர்களுக்கும் கிறிஸ்தவ ஊழியர்களுக்கும் போதனைகள் அளித்து வருகிறார். ஒருதடவை கர்னாடகாவில் அவர் போதகர்கள் கூடுகையில் பக்திவைராக்கியம் என்ற தலைப்பில் நான்கு நாட்களுக்கு போதனை அளித்தார். அதில் கலந்துகொண்டவர்கள் பெரிதும் ஆசீர்வாதம் அடைந்தார்கள். பலரை அந்தச் செய்திகள் உலுக்கியிருக்கின்றன. அவற்றை கிறிஸ்தவ தமிழுலகம் எழுத்தில் வாசித்துப் பயனடைய வேண்டும் என்ற ஆர்வத்துடனேயே இப்போது நூலாக வெளியிட்டிருக்கிறது சீர்திருத்த வெளியீடுகள்.

பக்திவைராக்கியம் என்ற பதம் கிறிஸ்தவர்களுக்குப் புதிதல்ல. இது கிறிஸ்தவ வைராக்கியத்தின் இன்னொரு பெயர். ஆனால், அந்தப் பெயரில் நம்மத்தியில் காணப்படும் வைராக்கியத்தில்தான் குறைபாடிருக்கிறது. மனுஷத்தனமான வைராக்கியத்திற்கு இன்று போலி பக்திவடிவத்தைக் கொடுத்திருக்கிறார்கள் அநேகர். டேவிட் மெரெக் வேதத்தின் பல பாகங்களில் இருந்து ஆராய்ந்து தேர்ந்தெடுத்த வேதப்பகுதிகள், உதாரணங்கள் அனைத்தையும் ஒழுங்கோடு முறைப்படுத்தி மெய்யான பக்திவைராக்கியம் எப்படி இருக்கும், அதற்கு காரணகர்த்தா யார், அது இருக்கவேண்டியதன் அவசியமென்ன, அது இல்லாமலிருப்பதற்குக் காரணம் என்ன, அதை அடைவதற்கு என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் தெளிவாக பங்கு பங்காக இந்நூலில் விளக்கியிருக்கிறார். தமிழில் இப்படிப்பட்ட போதனைகளையோ, பிரசங்கங்களையோ இன்று எங்குமே கேட்கவோ, பார்க்கவோ முடியாது என்பதை உறுதியாக சொல்லலாம்.

இந்நூலின் இன்னொரு சிறப்பு என்னவென்றால், போதகரான நூலாசிரியர் பக்திவைராக்கியத்தை விளக்குவதற்கு தான் பயன்படுத்தி யிருக்கும் அத்தனை வேத வசனங்களையும் மேலெழுந்தவாரியாக வாசித்து அதிலுள்ளதை விளக்கிவிட்டுப் போய்விடாமல், ஒவ்வொரு வசனப்பகுதியையும் மூல மொழிகளின் அடிப்படையில் தெளிவாக ஆராய்ந்து பார்த்து துல்லியமாக அவற்றில் கொடுக்கப்பட்டிருக்கும் கர்த்தரின் வெளிப்பாட்டை நாமறிந்துகொள்ளும்படி விளக்கி யிருக்கிறார். இந்த முறையில் வேதவிளக்கங்களையும், வேதப் பிரசங்கங்களையும் கொடுப்பதை சீர்திருத்த பிரசங்கிகளிலும், சீர்திருத்த இறையியலறிஞர்களிலும் மட்டுமே காணமுடியும். அது சீர்திருத்தவாத காலத்தில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்ட வேதவிளக்கமுறை. இதை நூலாசிரியர் மிகவும் சிறப்பான முறையில்

*செய்திருக்கிறார். இந்தவிதத்தில் நம்மினத்தில் பிரசங்கங்கள் கொடுக்கப்படுவது அரிது. ஆகவே, இந்நூலை வாசகர்கள் அவசரப்படாமல் பொறுமையோடு வாசிக்கவேண்டும். வேகமான வாசிப்பின் மூலம் இந்நூலாகிய கடலில் இருந்து முத்தெடுக்க முடியாது. முக்கியமாக பிரசங்கப் பணியில் இருக்கிறவர்கள் இதைக் கவனத்தோடு வாசிக்கிறபோது பக்திவைராக்கியத்தைப் பற்றி மட்டுமல்லாமல் வேதவசனங்களை எப்படி வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற வித்தையையும் சேர்த்துக் கற்றுக்கொள்ள முடியும்.*

*இந்நூல் திருச்சபை ஆத்துமாக்கள் அனைவரும் வாசிக்கவேண்டிய நூல். போதகர்கள் இதை வாசிக்காமல் இருக்கவே கூடாது. ஊழிய வாஞ்சை, வைராக்கியம் என்றால் என்னவென்று தெரிந்துகொள்ள இது ஊழியக்காரர்கள் அனைவருக்கும் அவசியமான நூல். இது நிச்சயம் வாசிக்கிறவர்களை சிந்திக்க வைக்கும்; அவர்களுடைய இருதயத்தைத் தொட்டு அசைக்கும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இந்நூலைப் பெற்று வாசித்து அநேகர் பயனடைய கர்த்தர் கிருபை பாராட்டட்டும். நூலை வெளியிடும் சீர்திருத்த வெளியீடுகளுக்கும், நூலை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்ததோடு அதை சிரத்தையோடு தயாரித்து அச்சுக்குப் போகும்வரை அனைத்து விஷயங்களையும் கவனித்துக்கொண்ட சீர்திருத்த வெளியீடுகளின் நிர்வாகியான ஜேம்ஸுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*ஆர். பாலா*
*பதிப்பாசிரியர்*

# பொருளடக்கம்


*1.* எங்கிருந்து வருகிறது பக்திவைராக்கியம்?....................................*9*

*2.* எது பக்திவைராக்கியம்?................................................................*23*

*3.* பக்திவைராக்கியம் வளரும் சூழல் (பகுதி 1) .............................*35*

*4.* பக்திவைராக்கியம் வளரும் சூழல் (பகுதி 2) .............................*47*

*5.* பக்திவைராக்கியத்தை இழக்க முடியுமா?...................................*57*

*6.* பக்திவைராக்கியமும் முதலாவது கட்டளையும்...........................*69*

*7.* ஜாக்கிரதையுள்ள பக்திவைராக்கியம்............................................*83*

*8.* பாவகரமான வைராக்கியம் ............................................................*95*

*9.* பக்திவைராக்கியத்தின் அதிரடி உதாரணங்கள்...........................*111*

*10.* பக்திவைராக்கியமும் ஜெபமும்...................................................*139*

*11.* தள்ளாடும் பக்திவைராக்கியம்......................................................*155*

*12.* அனல் வீசும் பக்திவைராக்கியம்..................................................*179*

# 1

# எங்கிருந்து வருகிறது பக்திவைராக்கியம்?

பக்திவைராக்கியத்தைக் கிறிஸ்தவ வைராக்கியம் என்றும் சொல்லலாம். இரண்டும் ஒரே விஷயத்தை விளக்கும் வெவ்வேறு வார்த்தைப்பிரயோகங்கள். இந்த நூல் முழுவதும் பொதுவாகவே பக்திவைராக்கியம் என்ற வார்த்தைப்பிரயோகத்தையே பயன்படுத்தப் போகிறேன். சமீப காலமாக இதைப்பற்றி நான் அதிகம் சிந்தித்து வருகிறேன். ஏனென்றால் வயது போய்க்கொண்டே இருக்கிறது, முதுமை தலைதூக்கி உடல் வலிமையும் குறைந்துகொண்டே போகிறது, இதற்கிடையில் பக்திவைராக்கியமாகிய இந்த விஷயத்தில் நான் எப்படி ஊக்கத்தோடு இருக்கப்போகிறேன் என்ற எண்ணங்கள் என்னை இப்படி சிந்திக்க வைக்கிறது. நான் வழக்கமாக ஒவ்வொரு நாளும் காலைவேளையில் என் தனிப்பட்ட தியானத்தின்போது ஒரு பாடல் பாடுவது வழக்கம். கடந்த இலையுதிர்காலத்தின்போது சில பாடல்கள் எனக்கு ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிய உண்மையை உணரச் செய்தன. அதாவது என் வாழ்க்கைப் போராட்டத்தில், என் உடல் வலிமையைவிட வேறு அநேக விஷயங்களும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதை நான் உணர்ந்தேன். அந்தப் பாடல் ஒன்றின் சில வரிகளைக் கேளுங்கள்.

> நாங்கள் சேவிக்க வேண்டியபடி உம்மை சேவித்தது இல்லை; ஐயோ, அநேக கடமைகளைச் செய்யாமல் விட்டிருக்கிறேன், குறைந்த உற்சாகத்தோடு செய்யப்பட்ட வேலைகள் பல, போராட்டத்தில் இழப்பு, அரிதாகவே வெற்றி! கர்த்தாவே, வைராக்கியத்தைத் தாரும், வலிமையைத் தாரும் உமக்காக உழைக்கவும், உமக்காகப் போராடவும்.

இந்த வார்த்தைகள் ஒரு முக்கியமான வேத உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன. இவை நமது வலிமையைக் குறிக்கின்ற அதேவேளை பக்திவைராக்கியத்தையும் அதோடு தொடர்புபடுத்திக் காட்டுகின்றன. இந்த உண்மையை உணர்ந்ததனால்தான் பக்திவைராக்கியம் பற்றி இங்கே விளக்க முற்பட்டேன். முதலில் என் சொந்த நலனுக்காகவே இதைச் செய்தேன். இருந்தபோதும், இது நம் ஒவ்வொருவருக்கும்கூட மிகவும் அவசியமானது. குறிப்பாக கர்த்தரின் சிறப்பான பணியைச் செய்து வருகிற போதகர்களுக்கு இது மிகவும் அவசியமானது. வயது பாரபட்சம் எதுவுமில்லாமல் எல்லாருமே அக்கறைகாட்ட வேண்டிய ஒன்றுதான் பக்திவைராக்கியம். சங்கீதம் 71:9ஐ ஏசாயா 40:30–31 வசனங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

***சங்கீதம் 71:9***

*முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் கனம் குறையும்போது என்னைக் கைவிடாமலும் இரும்.*

***ஏசாயா 40:30–31***

*இளைஞர் களைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் களைப்படை யார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.*

கிறிஸ்தவ வைராக்கியத்தை விளங்கிக்கொள்ளுவதற்கு ஏதுவாக, இதுபற்றி விளக்கும் வேதத்தின் ஒரு முக்கிய பகுதியில் இப்போது நம்முடைய கவனத்தைச் செலுத்துவோம்.

***தீத்து 2:13–14***

*நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண் டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.*

இந்தப் பகுதியில் ஐந்து காரியங்களைக் கவனிக்கலாம்.

## 1. கிறிஸ்தவ வைராக்கியத்தின் அனல்போன்ற வீரியத்தன்மை.

இங்கே குறிப்பாக, "பக்திவைராக்கியமுள்ள" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை மீது நம்முடைய கவனத்தை செலுத்துவோம். இந்த வார்த்தை "அதீத ஆர்வம்" என்ற கிரேக்கம் மொழி வார்த்தையைச் சேர்ந்தது. எரிகிற அல்லது கொதிக்கிற என்பது இந்த வார்த்தையின் அடிப்படை அம்சம். இது அடிப்படையில் ஊக்கம், உற்சாகம், ஆர்வம், விருப்பம் இவைகளை தன்னில் கொண்டது. "கொதிக்கிற" என்பது உற்சாகத்துடன் ஒன்றை அல்லது ஒருவரைச் சார்ந்திருப்பது. வேதம் "வைராக்கியம்" என்ற வார்த்தையைக் குறிப்பிடுகிற பெரும்பாலான இடங்களில் ஆத்திரத்தையும் கோபத்தையுமே சுட்டிக்காட்டுகிறது. இன்னும் குறிப்பாக சில இடங்களில் பகைமை, பொறாமை என்றும் அதைக் குறிப்பிடுகிறது. வேறு சில இடங்களில் பேராசை, இச்சை, அல்லது அதீத அன்பு என்பதையும் குறிப்பிடுகிறது. இதில் நன்மை, தீமை ஆகிய இரண்டையும் காண முடியும். எனவே, வேதம் நீதியான வைராக்கியத்தையும் தீமையான வைராக்கியத்தையும்பற்றி நமக்கு விளக்குவதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இந்தப் போதனையைத் தொடர்ந்து படிக்கிறபோது நீதியான வைராக்கியத்திற்கும் தீமையான வைராக்கியத்திற்குமுள்ள வேறுபாடுகளை நாம் கண்டறியலாம். நாம் இப்போது ஆராய்ந்து வருவது நீதியான பக்திவைராக்கியத்தையே.

இதுவரை நாம் பார்த்த விஷயங்கள் நம்மில் ஒரு கேள்வியை எழுப்புகிறது. சரியான வழியில் நான் ஒரு வைராக்கியமுள்ள கிறிஸ்தவனாக இருக்கிறேனா? நீதியான காரியங்களுக்காக உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் நான் வாழ்ந்து வருகிறேனா? இதற்கான பதிலை, பவுல் நாம் பார்த்து வருகிற வேதப்பகுதியில் அற்புதமாக விவரித்திருக்கிறார்.

## 2. கிறிஸ்தவ வைராக்கியத்தின் நடைமுறை அம்சம்.

இங்கே பக்திவைராக்கியத்தின் மெய்யான வெளிப்பாடாக ஒரு குறிப்பிட்ட தன்மை வலியுறுத்தப்படுகிறது. அதுதான் நற்செயல்கள். பவுல் சொல்லுகிறார், "நற்செயல்களைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்கள்" என்று.

பவுல் தீத்துவுக்கு எழுதிய இந்நிருபத்தில் "நற்செயல்" என்பது அதிகமாக வலியுறுத்தப்பட்டுள்ள விஷயமாக இருக்கிறது. அது

வெளிப்படையாக குறைந்தது ஐந்து இடங்களில் குறிப்பிடப் பட்டிருக்கிறது (தீத்து 2:7, 3:1, 5, 8 மற்றும் 14).

2:7 **நற்செயல்களைச்** செய்வதின்மூலம் நீயே எல்லாவற்றிலும் உன்னை மாதிரியாகக் காண்பித்து,

3:1 ஆளுகைசெய்பவர்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், **நன்மையானவற்றைச்** செய்ய ஆயத்தமாயிருக்கவும்,

3:5 நாம் செய்த **நீதியான காரியங்களுக்காக** அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுபிறப்பின் முழுக்கினாலும், பரிசுத்த ஆவியானவரால் புதுப்பிக்கப்படுதலினாலும் நம்மை இரட்சித்தார்.

3:8 இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் **நற்செயல்களைச்** செய்யத் தங்களை ஒப்படைக்கும்படி நீ இவைகளை வலியுறுத்திப் போதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே மேன்மையானவையும் மனிதருக்குப் பயனுமுடையவைகள்.

3:14 நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி அன்றாடத் தேவைகளைச் சந்திக்கும்படி **நற்செயல்களைச்** செய்யப் பழகட்டும்.

ஒரு புறம், நம்முடைய நீதியான செயல்களின் மூலம் நாம் இரட்சிக்கப்படவில்லை என்பது இங்கே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; 3:5 வசனத்தை வாசித்துப் பாருங்கள். எனினும், மற்ற நான்கு வசனங்களும் விசுவாசிகளான நாம் நற்செயல்களைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. அவை நம்முடைய ஆழ்மனதில் இருந்து எழும் உணர்வுபூர்வமான முயற்சியாக இருக்க வேண்டும். இவைகளை நாம் எப்படி ஒன்று சேர்த்துப் பார்ப்பது? நற்செயல்கள் என்பது, நாம் எப்படியாவது கிறிஸ்தவராகிவிடவேண்டும் என்பதற்காகச் செய்வது அல்ல, அவை கிறிஸ்தவனின் கனிகள் அல்லது கிறிஸ்தவனாக அவன் இருப்பதனால் அவனில் வெளிப்படும் நடைமுறைச் செயல்களாகும்.

நற்செயல் என்று பவுல் எதைக் குறிப்பிடுகிறார்? தீத்து 3:14ல் பவுல் ஒரு குறிப்பிட்ட வகையை வலியுறுத்துகிறார். அது நம்மை

சுற்றி இருப்பவர்களின் எந்த அவசர தேவைகளையும் பூர்த்தி செய்ய நாம் ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே. அது உண்மையானால், நம்மை சுற்றியிருப்பவர்களின் எந்த அவசரத் தேவையும் நம்மை நற்செயல் செய்யும்படித் தூண்ட வேண்டும்? நம்மை சுற்றியிருப்பவர்களின் ஆவிக்குரிய தேவையே அவர்களின் அவசரத் தேவையாக இருக்கின்றது. இதுவே பாவத்தில் இருக்கும் ஒவ்வொருவரைப் பற்றியதுமான ஆத்மீக உண்மை. அவர்கள் பாவத்தில் இருந்து விடுபட்டு கடவுளோடு சரியான உறவை ஏற்படுத்திக்கொள்ளாவிட்டால் அவர்கள் நரகத்தில் நித்திய வேதனையை அனுபவித்து அழிந்து போக வேண்டியிருக்கும். எனினும், தீத்து 3:14ல் பவுல் குறிப்பிடுகிற இந்த அவசரத் தேவைகள் அவர்களுடைய ஆத்மீகத் தேவைகளை மட்டுமல்லாது, சரீரப்பிரகாரமான தேவைகளையும் உள்ளடக்கியது. அதாவது உணவு, உடை, உறைவிடம் என்பவைகளும் அதில் அடங்கும். ஏழை எளியவர்களை நாம் மறந்துவிடக் கூடாது என்று வேதம் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

**கலாத்தியர் 2:10**

எளியோரை நினைத்துக்கொள்ளும்படிக்கு மட்டும் சொன்னார்கள்; அதற்கு முன்பே நானும் அவ்வாறு செய்ய ஆர்வமுள்ளவனாயிருந்தேன்.

இவை நமக்குப் பாடம் கற்றுத்தரும்படியாக இன்னொரு கேள்வியை எழுப்புகின்றன. அது, நான் நற்செயல்களைச் செய்கிறவனாக இருக்கிறேனா? என்பதுதான். என்னால் முடிந்தவரையில் என்னைச் சுற்றியிருக்கிறவர்களின் அவசியமான ஆத்மீக மற்றும் சரீரத் தேவைகளைத் தீர்த்துவைக்கிறவனாக இருக்கிறேனா? இந்த நற்செயல்களைச் செய்வதற்கான ஆர்வம் நம்மில் இல்லாதபோது நாம் பக்திவைராக்கியமுள்ளவர்கள் என்று நம்மை நாமே அழைத்துக்கொள்ள முடியாது.

### 3. கிறிஸ்தவ வைராக்கியத்தைக் கொண்டிருப்பதற்கான அடிப்படை வழிமுறை.

பவுல் தீத்து 2:14ல் சொல்லுகிறார், நற்செயல்களைச் செய்வதற்கு வைராக்கியமுள்ளவர்களிடத்தில் அந்த வைராக்கியத்துக்கு அவசியமான இரண்டு குறிப்பிட்ட விஷயங்கள் காணப்படும் என்று.

அ. முதலாவது, **நற்செயல்களில் ஆர்வமுள்ளவர்கள் சகல அக்கிரமங்களிலிருந்தும் மீட்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.** நாம் அனைவரும் பிறப்பில் பாவத்திற்கு அடிமைகளாகப் பிறந்தவர்கள். கடவுளுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் விரோதிகளாக, சுயநலமும், சுயத்தை மட்டுமே மையமாக கொண்ட வாழ்க்கையும் வாழுகிறவர்கள். அந்த நிலையில் மற்றவர்களுடைய அவசரத் தேவைகளைத் தீர்ப்பதற்கான வைராக்கியத்தை நாம் எப்படிக் கொண்டிருக்க முடியும்? அக்கிரமங்களில் அடிமைகளாக இருப்பதிலிருந்து நாம் மீட்கப்படுவதன் மூலமாக மட்டுமே அது நிகழமுடியும்.

கிறிஸ்தவ வைராக்கியத்திற்கான இன்றியமையாத வழிமுறையான இரண்டாவது விஷயத்தையும் பவுல் விளக்குகிறார். முதலாவதைப் போலவே இரண்டாவதும் மிக முக்கியமானதும் அவசியமானதுமாகும்.

ஆ. **நற்செயல்களில் ஆர்வமுள்ளவர்கள் கடவுளால் சுத்திகரிக்கப்பட்ட அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட அவருடைய சொந்த ஜனங்களாக இருப்பார்கள்.** இந்த வார்த்தைப்பிரயோகங்களைக் கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம். முதலாவதாக, இரட்சிப்பின் மூலம், கடவுள் நம்மை அவருடைய சொந்த ஜனமாக ஏற்படுத்தியிருக்கிறார். கடவுள் தம்முடைய பெரிதான கிருபையினால், தாமே விரும்பி நம்மைப் போன்றவர்களைத் தம்முடைய மக்களாக ஏற்படுத்தி நம்முடைய தேவனாகவும் இருக்கிறார். இந்த உண்மை மேலும் ஓர் உண்மைக்கு நம்மை வழி நடத்துகிறது. அதாவது, கடவுள் பரிசுத்தராக இருப்பதனால் அவரது சொந்த மக்களும் பரிசுத்தமாக வாழவேண்டும். என்றாலும், நாம் நல்ல செயல்களையல்லாமல், பல தீய செயல்களையே வாழ்க்கையில் செய்திருக்கிறோம். எனவே, நாம் கடவுளின் சொந்த ஜனங்களாக இருப்பதற்கு நம்முடைய தீய செயல்களிலிருந்து சுத்திகரிக்கப்படுவது மட்டுமே ஒரே வழி. இந்த உண்மை இன்னும் ஆழமாக வலியுறுத்தப்பட்டிருக்கிற மற்றொரு வேதப்பகுதியைக் கவனியுங்கள்.

*எபிரெயர் 9:13–14*

*அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், உடலில் சுத்தமுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே மாசற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம், வாழும் தேவனுக்கு ஊழியம் செய்யும்படி*

*சாவுக்கேதுவான செயல்களிலிருந்து உங்கள் மனச்சாட்சியைத் தூய்மையாக்குவது எவ்வளவு நிச்சயம்!*

தேவனுக்கு நாம் ஊழியம் செய்யவேண்டுமானால், அவருக்குக் கீழ்ப்படிவதோடு, நற்செயல்கள் செய்வதும், செத்த கிரியையிலிருந்து நம்முடைய மனச்சாட்சி சுத்திகரிக்கப்பட வேண்டியதும் அவசிய மானது என்று இப்பகுதியில் மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. அனைத்திற்கும் மேலாக, நம்முடைய மனச்சாட்சி குற்றத்தன்மை கொண்டதாகவும் கண்டனத்திற்குரியதாகவும் இருக்கிறபோது எப்படி நாம் நற்செயல்களைச் செய்வதற்கு வைராக்கியங் கொண்டவர்களாக இருக்க முடியும்?

எபிரெயர் 9:13–14 இதை மேலும் விளக்குகிறது. இந்தப் பகுதி நம்முடைய கெட்ட மனச்சாட்சி கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட முடியும் என்கிறது. அவைகள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மட்டுமே சுத்திகரிக்கப்பட முடியும். எபிரெயர் 9:22 தொடர்ந்து சொல்லுகிறது “இரத்தம் சிந்துதல் இல்லாமல், பாவ மன்னிப்பு உண்டாகாது” என்று. நம்முடைய செத்த கிரியைகளிலிருந்து நாம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம் என்றும் நம்முடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்த நேரத்திலும் நாம் உறுதியாக அறிந்திருப்பதற்குக் காரணம் கிறிஸ்துவின் இரத்தம்தான். இது நாம் பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுவை விசுவாசித்தபோது அனுபவித்த ஆரம்ப சுத்திகரிப்பு. இதன் மூலமாகத்தான் நாம் கிறிஸ்தவர்களாக, தொடர்ந்து நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மனந்திரும்பு கிறவர்களாகவும் விசுவாசத்தின் மூலம் தொடர்ந்து கிறிஸ்துவை பற்றிக்கொண்டிருக்கவும் செய்கிறது.

***அப்போஸ்தலர் 15:9***

*விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் எந்தவொரு வேறுபாடு மிராதபடி செய்தார்.*

***1 யோவான் 1:9***

*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து அனைத்து அநீதியிலிருந்தும் நம்மைத் தூய்மையாக்குவதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

*2 கொரிந்தியர் 7:1*

*இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறபடியினால், அன்பானவர்களே, சரீரத்தையும் ஆவியையும் கறைப்படுத்தும் எதையும் நீக்கி, நம்மைத் தூய்மைப் படுத்திக்கொண்டு, தூய்மையாக்குதலைத் தேவனிடம் கொண்ட அச்சத்தோடே நிறைவாக்கக்கடவோம்.*

இந்தவிதமான தொடர்ச்சியான சுத்திகரிப்பின் மூலமாக மட்டுமே சரியான முறையில் நாம் நற்செயல்களுக்காக வைராக்கியம் கொண்டிருக்க முடியும். எனினும் நம்முடைய சுத்திகரிப்பு மற்றும் மீட்பில், கிறிஸ்துவின் பங்கை மறுக்க முடியாது.

இப்போது, கிறிஸ்தவ வைராக்கியத்தின் அடிப்படையான வழிமுறைகள், நம்மிடம் வலியுறுத்தும் பயன்பாடுகளைக் கவனிப்போம்.

முதலாவதாக, கடவுளுடைய பரிசுத்த மக்களாக இல்லாமலிருந்தால் மெய்யான பக்திவைராக்கியம் ஒருவனில் ஒருபோதும் இருக்க முடியாது. சுயநலத்திலிருந்தும் அக்கிரமத்திலிருந்தும் விடுவிக்கப் படாத இருதயத்தில் பக்திவைராக்கியம் இருப்பதற்கு வழியே இல்லை. கடவுளுக்கும் அவருடைய கட்டளைக்கும் விரோதமாக பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படாமல் இருப்பது நம்மை பக்திவைராக்கியத் திலிருந்து எப்போதும் புறம்பே தள்ளியே வைக்கும்.

இந்த முதலாவது பாடத்தைச் சற்று எதிர்மறையானவிதத்தில் பார்ப்போம். அதாவது, கிறிஸ்து நம்மை விடுவித்து சுத்திகரித் திருப்பாரானால், நம்மில் நற்செயல்களைச் செய்கிறவராகவும் நம்மில் செயல்பட்டிருப்பார் என்று நாம் நம்பலாம். அவர் நம்மை இரட்சித்ததற்கு இதுவே முக்கிய நோக்கமாக இருக்கிறது. எனவே, நற்செயல்களைச் செய்வதற்கான வைராக்கியத்தைத் தரும்படி நாம் அவரிடம் கேட்டால், அதை அவர் நமக்குத் தருவார் என்று எதிர்பார்க்கக் கூடிய ஊக்கத்தை இது நமக்களிக்கிறது.

மீட்பு மற்றும் சுத்திகரிப்பின் மூலம் நாம் பெற்றிருக்கிற பரிசுத்த வாழ்க்கையின் பலனே கிறிஸ்தவ வைராக்கியம். ஆனால் கிறிஸ்தவ வைராக்கியத்தோடுகூடிய பரிசுத்த வாழ்க்கை எங்கிருந்து வருகிறது? இந்தக் கேள்வி நம்மை அடுத்த விஷயத்துக்கு அழைத்துச் செல்லுகிறது.